டிரஸ்ட் ஆரம்பித்திட...
புதிதாக டிரஸ்ட், பவுண்டேஷன், கட்சி, ஆசிரமம், சங்கம், மன்றம், கழகம் பதிவு செய்திட தொடர்பு கொள்ளவும்.
பகவான் பவுண்டேஷன்
96004 02096

நல்லவே எண்ணல் வேண்டும்.., எண்ணிய முடிதல் வேண்டும்..,

# சக்கர வியூகம்

தினசரி "தேமதுரத் தமிழோசை உலகமெலாம்" புலனாய்வு நாளிதழ்
www.SAKKRAVIYUGAM.com

TAMIL PRESS CLUB
தமிழ் பிரஸ் கிளப்
Reg.No: 12/2013
தமிழ்நாடு, பாண்டிச்சேரியில் சிறப்பாக செயல்பட்டு வரும் பொது நல அமைப்பிற்கு 2026 ஆம் ஆண்டு உறுப்பினர் சேர்க்கை அனைத்து மாவட்டங்களிலும் ஆரம்பம்...
ஆர்வமுள்ளவர்கள் அமைப்பாளராக இணைந்திட
88705 00000
99 44 616 559

Website: www.sakkraviyugam.com | PRGI:TNTAM/25/A1018 | Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 | ISSUE: 162 | 6.12.2025 | SATURDAY | KARTHIGAI : 19 | PRICE : RS.5/-
மலர் : 01 | இதழ் : 162 | 6.12.2025 | சனிக்கிழமை | கார்த்திகை : 19 | விலை : ரூ.5/-

3 யாருடன் கூட்டணி; ஒரே நேரத்தில் திமுக தவெகவுடன் பேச்சு நடத்தும் காங்கிரஸ்

4 தேனி மாவட்டம் 4ஆவது புத்தகத் திருவிழா - 2025 நடைபெற உள்ள இடத்தில் முன்னேற்பாடு பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் ஆய்வு

2 தீபம் ஏற்றாமல் நீதிமன்ற அவமதிப்பு; திருப்பரங்குன்றம் வழக்கை டிச.,9க்கு ஒத்திவைத்தது ஐகோர்ட் கிளை


# "அமைதிப் பாதையை நோக்கி உலகை வழிநடத்துவோம்" : புதின் முன்னிலையில் மோடி பேச்சு

புதுடெல்லி: டிச.6-

உக்ரைனுடன் அமைதியான தீர்வுக்கு ரஷ்யா பாடுபடுகிறது என்றும் அமைதியின் பாதையில் பயணிப்பதன் மூலமே உலகம் பயனடையும் என்றும் தெரிவித்த பிரதமர் மோடி, அமைதிப் பாதையை நோக்கி உலகை வழிநடத்துவோம் என கூறினார்.

இரண்டு நாள் பயணமாக நேற்று இந்தியா வந்த ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின், இன்று காலை குடியரசுத் தலைவர் மாளிகைக்கு வருகை தந்தார். அங்கு அவருக்கு ராணுவ அணிவகுப்பு மரியாதையுடன் சிவப்புக் கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது. குடியரசுத் தலைவர் திரவுபதி முர்முவும், பிரதமர் மோடியும் அவரை வரவேற்றனர். இதையடுத்து, மகாத்மா காந்தியின் நினைவிடமான ராஜ்காட் சென்ற விளாடிமிர் புதின், அங்கு மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்.

இதையடுத்து, டெல்லியில் உள்ள ஹைதராபாத் இல்லத்தில் பிரதமர் மோடியை புதின் சந்தித்தார். அப்போது இரு தலைவர்களும் இருதரப்பு உறவை மேலும் வலுப்படுத்துவது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தினர். பின்னர் இரு தலைவர்களும் கூட்டாக செய்தியாளர்களை சந்தித்தனர்.



அப்போது பிரதமர் மோடி, "ரஷ்ய அதிபர் புதின் தொலைநோக்குடன் செயல்படக்கூடிய தலைவர். உக்ரைன் நெருக்கடி தொடங்கியதில் இருந்து நாங்கள் தொடர்ந்து விவாதித்து வருகிறோம்.

ஒரு உண்மையான நண்பராக அவர் எல்லாவற்றையும் அவ்வப்போது எங்களுக்குத் தெரியப்படுத்தி வருகிறார். நம்பிக்கை ஒரு பெரிய பலம் என்று நான் நம்புகிறேன். இந்த விஷயத்தை (உக்ரைன் விவகாரம்) நான் உங்களுடன் பலமுறை விவாதித்துள்ளேன். அதனை உலகுக்கு முன்பாகவும் முன்வைத்துள்ளேன். அமைதியில்தான் நாடுகளின் நலன் அடங்கி இருக்கிறது. ஒன்றாக, உலகை அந்த பாதையை நோக்கி வழிநடத்துவோம்.

சமீபத்திய நாட்களில் மேற்கொள்ளப்படும் முயற்சிகளின் மூலம் உலகம் மீண்டும் அமைதியின் பாதைக்குத் திரும்பும் என்று நான் முழுமையாக நம்புகிறேன். இந்த விவகாரம் தொடர்பாக சமீப நாட்களில் நான் உலக தலைவர்களிடம் பேசும்போதெல்லாம், இந்த விவகாரத்தில் இந்தியா நடுநிலை வகிக்கவில்லை என்றும், இந்தியாவின் நிலைப்பாடு அமைதியின் பக்கமே உள்ளது என்றும் தெளிவாகக் கூறியுள்ளேன்.

அமைதிக்கான ஒவ்வொரு முயற்சியையும் நாங்கள் ஆதரிக்கிறோம். உக்ரைனுடன் அமைதி தீர்வை எட்ட ரஷ்யா பாடுபடுகிறது. நாம் அமைதிப் பாதையில் பயணித்தால் மட்டுமே உலகம் பயனடையும்.

பல்வேறு முன்னேற்றங்களுடன் இந்தியா ரஷ்யா உச்சிமாநாடு முன்னேறிக் கொண்டிருக்கிறது. உங்களின் (புதின்) இந்த வருகை வரலாற்றுச் சிறப்புமிக்கது. இந்தியாவுக்கான உங்கள் முதல் பயணம் நிகழ்ந்து 25 வருடங்கள் ஆகிறது. அந்த முதல் வருகையின்போது, இரு நாடுகளின் கூட்டாண்மைக்கான அடித்தளம் அமைக்கப்பட்டது. எங்கள் இருவருக்குமான உறவும் 25 ஆண்டுகளாக உள்ளதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்." எனத் தெரிவித்தார்.

இதையடுத்துப் பேசிய விளாடிமிர் புதின், "உக்ரைன் உடனான அமைதி முயற்சிகளில் இந்தியா கவனம் செலுத்துவதற்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ரஷ்யாவும் இந்தியாவும் ராணுவம், விண்வெளி, செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட துறைகளில் ஆழமான உறவுகளைக் கொண்டுள்ளன. இந்த அனைத்து துறைகளிலும் முன்னேற நாங்கள் திட்டமிட்டுள்ளோம்." எனத் தெரிவித்துள்ளார்.




## கீழக்கரை கலைஞர் நூற்றாண்டு ஏறு தழுவுதல் அரங்கில் அரசு சார்பில் ஜல்லிக்கட்டுபோட்டி

அலங்காநல்லூர், டிச.06

மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் ஊராட்சி ஒன்றியம், கீழக்கரை கிராமத்தில், கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கத்தில் ஹாக்கி இளையோர் உலகப்கோப்பை விளையாட்டு போட்டிகளில் பங்கேற்ற வெளிநாட்டு வீரர்களுக்காக நடத்தப்படும் தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டான ஜல்லிக்கட்டு போட்டியை மாண்புமிகு வணிகவரி மற்றும் பத்திர பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, கொடியசைத்து துவக்கி வைத்தார். அருகில் மாநகராட்சி ஆணையாளர் சித்ராவிஜயன் இ,ஆப., மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் பி.கே.அரவிந்த் இ,கா,ப., சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேசன், வாடிப்பட்டி தாசில்தார் ராமச்சந்திரன், சமயநல்லூர் துணை கண்காணிப்பாளர் ஆனந்தராஜ், அலங்காநல்லூர் காவல் நிலைய ஆய்வாளர் பிரகாஷ், கிராம நிர்வாக அலுவலர் மதன், மற்றம் யூனியன் அலுவலர்கள் மருத்துவத்துறையினர் வருவாய்த்துறையினர்மாடுபிடி வீரர்கள் காளை உரிமையாளர்கள் கலந்து கொண்டனர்.




■ உலக மாற்றத்திறனாளிகள் விழாவினை முன்னிட்டு சிகரம் தொடுவோம் அறக்கட்டளை சார்பில் முத்தனம் பாளையம் பகுதியில் உள்ள தலைமை அலுவலகத்தில் 50க்கும் மேற்பட்ட மாற்றத்திறனாளிகளுக்கு 5 கிலோ அரிசி சிற்பம் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது விழாவிற்கு தலைவர் மருது பாண்டி தலைமை தாங்கினார்.பொருளாளர் அன்பு விழா ஏற்பாட்டு செய்திருந்தார்.செயலாளர் சண்முகவேல் வரவேற்றார் இதில் நிர்வாகிகள் பங்கேற்றனர்...

## திருப்பூரில் விற்பனைக்கு பதுக்கி வைக்கப்பட்டிருந்த 6 டன் பிளாஸ்டிக் பாலிபேக் பொருட்கள் பறிமுதல்! மாநகராட்சி அதிகாரிகள் அதிரடி நடவடிக்கை!

திருப்பூர், டிச.6-

திருப்பூர் மாநகராட்சி பகுதிகளில் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட ஒரு முறை மட்டுமே பயன்படுத்தக்கூடிய பிளாஸ்டிக் பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாக தொடர்ந்து மாநகராட்சி அதிகாரிகளுக்கு புகார் வந்ததை எடுத்து திருப்பூர் மாநகராட்சி ஆணையர் அமித் உத்தரவின் பேரில் இணை ஆணையர் மகேஸ்வரி தலைமையிலான மாநகராட்சி அலுவலர்கள் அரிசிகடை வீதி, கே எஸ் சி ஸ்கூல் வீதி என இருபதுக்கு மேற்பட்ட கடைகளில் திடீர் ஆய்வு மேற்கொண்டனர். இதில் அரசால் தடை செய்யப்பட்ட ஒரு முறை மட்டுமே பயன்படுத்தக்கூடிய பாலித்தீன் கவர்கள், டீ டம்ளர், தண்ணி டம்ளர், தர்மாகோல் தட்டு பிளாஸ்டிக் பூசப்பட்ட தட்டு உள்ளிட்ட 6 டன் எடை கொண்ட பொருட்களை மாநகராட்சி அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய மாநகராட்சி ஆணையர் அமித் எதிர்வரும் ஜனவரி 1ஆம் தேதி முதல் பிளாஸ்டிக் இல்லா மாநகராட்சியாக உருவாவதற்கு முன்னோட்டமாக தற்பொழுது இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் இதில் பத்துக்கும் மேற்பட்ட கடைகள் தடை செய்யப்பட்ட பொருட்களை விற்பனை செய்து வந்ததாகவும் முதல் முறை என்பதால் 25 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாகவும் தொடர்ந்து விற்பனையில் ஈடுபட்டால் மறுமுறை ஐம்பதாயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்படும் என்றும் தொடர்ந்து விதிமுறைகளை மீறும் கடைகளை சீல் வைக்கப்படும் என்றும் கூறினார். மேலும் பிளாஸ்டிக் பொருட்கள் விற்பனை குறித்து பொதுமக்கள் மாநகராட்சியின் அதிகாரிகளுக்கு புகார் தெரிவிக்கலாம் என்றும் இதற்கென மாநகராட்சி டோல் ஃப்ரீ எண்ணில் தொடர்பு கொண்டு பொதுமக்கள் புகார் அளிக்கலாம் என்றும் தெரிவித்தார். இந்த நிகழ்ச்சியில் மாநகராட்சியின் சுகாதார துறை அதிகாரிகள் ஏராளமானோர் உடன் இருந்தனர்.



## ஆத்தூர் தொகுதியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை திட்டப்பணிகளை அதிகாரிகள் கண்காணித்து அனைவருக்கும் வழங்க நடவடிக்கை : அமைச்சர் ஐ.பெரியசாமி

சின்னாளபட்டி, டிச.6-

ஆத்தூர் தொகுதியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை திட்டப்பணிகளை அதிகாரிகள் கண்காணித்து முறையாக அனைவருக்கும் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அமைச்சர் ஐ.பெரியசாமி உத்தரவிட்டுள்ளார்.

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் சட்டமன்ற தொகுதி திமுக உறுப்பினரும், திமுக மாநில துணை பொதுச்செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி அவர்களிடம் ஆத்தூர் தொகுதியைச் சேர்ந்த பொது மக்கள் மற்றும் கோரிக்கை மனுக்களைப்; பெற்று உடனடியாக சம்மந்தப்பட்ட அதிகாரிகளை தொடர்பு கொண்டு பொதுமக்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற உத்தரவிட்டார். அப்போது ஆத்தூர் தொகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் ஒரு சிலர் தங்களுக்கு இலவச வீட்டு மனைப்பட்டா வேண்டுமென்றும், கலைஞரின் கனவு இல்லத் திட்டம் மூலம் வீடுகள் வழங்க வேண்டும் என கோரிக்கை மனு கொடுத்தனர். அதனைத் தொடர்ந்து புதுச்சத்திரம் ஊராட்சியை சேர்ந்த பொதுமக்கள் மற்றும் கட்சி நிர்வாகிகள் தங்கள் ஊராட்சி பகுதியில் 100 நாள் வேலைத்திட்டப் பணிகளில் குளறுபடிகள் இருப்பதாகவும், முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள் 100 நாள் வேலைத் திட்டப் பணிகளில் தலையீடு செய்வதாகவும், அமைச்சரிடம் புகார் செய்தனர். உடனடியாக அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள், ஊரக வளர்ச்சித் திட்டப் பணிகளில் எந்த குளறுபடியும் நடைபெறாது, இதைத்தவிர மத்திய அரசில் நிதி வழங்காவிட்டாலும், மாநில அரசு கிராமப்புற ஏழை மக்களின் நலன் கருதியும் வேலைவாய்ப்பை வழங்க வேண்டும் என்ற எண்ணத்துடனும், 100 நாள் வேலைத் திட்டத்தை தமிழகத்தில் சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. அதிகாரிகள் முறையாக 100 நாள் வேலை திட்டப்பணிகளை கண்காணித்து பாகுபாடு காட்டாமல் அனைவருக்கும் பணிகள் முறையாக கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென உத்தரவிட்டார்.



அதன்பின்னர் தொடர்ந்து ஆத்தூர் தொகுதி பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களைப் பெற்று அவர்களுக்கு தீர்வு வழங்கினார். நிகழ்ச்சியின் போது திண்டுக்கல் கிழக்கு மாவட்ட பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் தண்டபாணி, ஆத்தூர் நடராஜன், ஒன்றிய செயலாளர்கள் பாறைப்பட்டி ராமன், எம்.இன்பராஜ், அமைச்சரின் உதவியாளர் வத்தலகுண்டு ஹரிஹரன், சட்டமன்ற உறுப்பினர் முகாம் அலுவலர் வடிவேல் முருகன், பொதுக்குழு உறுப்பினர் அக்பர் மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் இல.கண்ணன், இலக்கிய அணி அமைப்பாளர் முருகானந்தம், மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் பொன்முருகன், முன்னால் ஒன்றிய குழு உறுப்பினர்கள் செல்வி காங்யேகன், சுமதி கணேசன், நாகலட்சுமி ரமேஷ், காளீஸ்வரி மலைச்சாமி, மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர்கள் கும்மம்பட்டி விவேகானந்தன், பஞ்சம்பட்டி மணி, திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர் நெல்லை சுபாஸ், 7வது வார்டு திமுக நிர்வாகிகள் நரசிங்கம், வீரபாண்டி உட்பட திமுக நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.

# டில்லியில் பிரதமர் மோடி ரஷ்ய அதிபர் புடின் பேச்சுவார்த்தை



புதுடில்லி. டிச.6-

டில்லியில் ரஷ்ய அதிபர் புடின் உடன் பிரதமர் மோடி பேச்சுவார்த்தை நடத்தினார். முன்னதாக, ஜனாதிபதி மாளிகையில், ரஷ்ய அதிபர் புடினுக்கு சிவப்பு கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது.

இருநாள் அரசுமுறை பயணமாக, ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் இந்தியா வந்துள்ளார். டில்லியில் ஹைதராபாத் இல்லத்தில் பிரதமர் மோடியை சந்தித்து, ரஷ்ய அதிபர் புடின் பேச்சுவார்த்தை நடத்தினார். அப்போது இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது குறித்து இருநாட்டு தலைவர்களும் பேச்சுவார்த்தை நடத்தினர்.

அதன்பின், இரு நாடுகளை சேர்ந்த பிரதிநிதிகள் சந்தித்து பல்வேறு ஒப்பந்தங்கள் குறித்து பேச்சு நடத்தி வருகின்றனர். குறிப்பாக ராணுவ ஒத்துழைப்பு, எரிசக்தி, வர்த்தகம் உள்ளிட்ட துறைகளில் முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஹைதராபாத் இல்லத்திலேயே, புடினுக்கு இன்று பிரதமர் மோடி மதிய விருந்து அளிக்கிறார்.

வரவேற்பு

முன்னதாக, இன்று (டிச.,05) காலை ஜனாதிபதி மாளிகையில், ரஷ்ய அதிபர் புடினுக்கு முறைப்படி, சிவப்பு கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது. ராணுவ அணிவகுப்பு மரியாதை அவருக்கு அளிக்கப்பட்டது. புடினை ஜனாதிபதி திரவுபதி முர்மு, பிரதமர் மோடி உள்ளிட்டோர் வரவேற்றனர்.

அதன்பின் அங்கிருந்து டில்லி ராஜ்காட்டில் உள்ள மகாத்மா காந்தி சமாதிக்கு சென்ற புடின், மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்.

ஜனாதிபதி விருந்து

ஆண்டு உச்சி மாநாடு நிறைவடைந்த பின், ஜனாதிபதி திரவுபதி முர்மு அளிக்கும் விருந்திலும் ரஷ்ய அதிபர் புடின் கலந்து கொள்கிறார். அதன்பின், இன்று இரவு 9:00 மணிக்கு புறப்பட்டு மீண்டும் மாஸ்கோ செல்கிறார்.

# தீபம் ஏற்றாமல் நீதிமன்ற அவமதிப்பு; திருப்பரங்குன்றம் வழக்கை டிச.,9க்கு ஒத்திவைத்தது ஐகோர்ட் கிளை

மதுரை. டிச.6-

: திருப்பரங்குன்றம் தீபத்தூணில் தீபம் ஏற்றாமல் நீதிமன்ற உத்தரவை அவமதித்த வழக்கை, டிச.,9க்கு ஒத்திவைத்து ஐகோர்ட் கிளை உத்தரவிட்டுள்ளது.

திருப்பரங்குன்றம் மலை உச்சியில் உள்ள தீபத்தூணில், கார்த்திகை தீபம் ஏற்றவில்லை. நீதிமன்றம் உத்தரவிட்டும், அமல்படுத்தாமல் தி.மு.க., அரசு பிடிவாதம் காட்டியது. இதனால் ஹிந்து தமிழர் கட்சி நிறுவனர் ராம ரவிக்குமார் மதுரை கலெக்டர், போலீஸ் கமிஷனர், கோவில் செயல் அலுவலர் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர்ந்தார்.

அரசு கோரிக்கை

இந்த வழக்கு விசாரணை இன்று (டிச.,05) காலை 10.45 மணிக்கு மீண்டும் ஐகோர்ட் மதுரைக்கிளையில் நீதிபதி சுவாமிநாதன் முன் விசாரணைக்கு வந்தது. அப்போது, சுப்ரீம்கோர்ட்டில் மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளதால், விசாரணையை ஒத்திவைக்க




வேண்டும் என தமிழக அரசு தரப்பில் கோரிக்கை வைக்கப்பட்டது.

உத்தரவு

இந்த கோரிக்கையை ஏற்றுக்கொண்ட நீதிபதி சுவாமிநாதன் வழக்கு விசாரணையை டிசம்பர் 9ம் தேதிக்கு ஒத்திவைத்தார்.

இன்னொரு வழக்கும் ஒத்திவைப்பு

இந்நிலையில், தனி நீதிபதி தீர்ப்புக்கு எதிராக மாவட்ட கலெக்டர் தொடர்ந்த மேல் முறையீட்டு மனு நீதிபதிகள் ஜெயச்சந்திரன், ராமகிருஷ்ணன் அமர்வு முன்னிலையில் இன்று விசாரணைக்கு வந்தது. தமிழக அரசு சார்பில் மூத்த வக்கீல் அபிஷேக் மனு சிங்வி ஆஜரானார். தனக்கு வாதிட 5 நிமிடம் அவகாசம் வேண்டும் என்று கோரினார். ஆனால், நீதிபதிகள், 'இப்போது யார் தரப்பு வாதத்தையும் கேட்க முடியாது. அனைத்து மேல் முறையீடுகளையும் ஒன்றாக சேர்த்து விசாரிக்கிறோம்,' என்றனர்.

போலீஸ் கமிஷனர் தரப்பில் ஆஜரான வக்கீல் விகாஸ் சிங், தனி நீதிபதி உத்தரவுக்கு தடை விதிக்க கோரினார். ஆனால், அனைத்து தரப்பினரையும் கேட்காமல் தடை விதிக்க முடியாது என்று நீதிபதிகள் தெரிவித்தனர். அரசு தரப்பில் அட்வகேட் ஜெனரல் ராமன், அறநிலையத்துறை சார்பில் மூத்த வக்கீல் சண்முகசுந்தரம் ஆகியோரும் ஆஜராகி இருந்தனர்.

அரசு தரப்பில் வழக்கை டிச.,12க்கு ஒத்தி வைக்க கோரிக்கை வைத்தனர். இதை ஏற்ற நீதிபதிகள், வழக்கை டிச.,12க்கு ஒத்தி வைத்தனர். அனைத்து வழக்கையும் விசாரித்து ஒரே தீர்ப்பாக வழங்குவதாக நீதிபதிகள் தெரிவித்தனர்.

கடும் எச்சரிக்கை

"நீதிபதி மற்றும் தீர்ப்பை சிலர் விமர்சனம் செய்வதாக வக்கீல்கள் முறையிட்டனர். நீதிமன்றத்திற்கு வெளியே வீடியோ எடுத்து, சமூக வலைதளங்களில் பதி விடுவதாகவும் வக்கீல்கள் தெரிவித்தனர். இதற்கு நீதிபதிகள் கூறியதாவது:

நீதிமன்றத்தின் பொறுமையை சோதிக்க வேண்டாம். சமூக ஊடகங்களில் தேவையின்றி விமர்சனங்கள் செய்வதை, ஏற்றுக்கொள்ள முடியாது. திருப்பரங்குன்றம் மலை உச்சியில் தீபம் ஏற்றுவது தொடர்பான உத்தரவை விமர்சிக்கக் கூடாது.

மனுதாரர்கள் , எதிர்மனுதாரர்கள் ஐகோர்ட் மாண்பை கடைபிடிக்கும் வகையில் பேச வேண்டும். மீறினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு நீதிபதிகள் ஜெயச்சந்திரன், ராமகிருஷ்ணன் கடும் எச்சரிக்கை விடுத்தனர்.

# "தனிக்கட்சி தொடங்குவேன் என எந்தச் சூழலிலும் சொல்லவில்லை" ஓபிஎஸ்



சென்னை, டிச.6-

நான் தனிக்கட்சி தொடங்குவேன் என எப்போதும், எந்தச் சூழலிலும் சொல்லவில்லை" என முன்னாள் முதல்வர் ஓபிஎஸ் தெரிவித்துள்ளார்.

மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா நினைவுநாளையொட்டி அவரது நினைவிடத்தில் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் மரியாதை செலுத்தினார். பின்னர் அவர் செய்தியாளர்களிடம் பேசும்போது, "செங்கோட்டையன் தவெகவுக்கு சென்ற பிறகு அவரும் என்னிடம் பேசவில்லை, நானும் அவருடன் பேசவில்லை.

அடுத்த கட்ட நகர்வு தமிழக மக்களின் எண்ணப்படி தான் இருக்கும். அதிமுக, தொண்டர்களின் இயக்கம். அது எப்போதும் பலவீனமடையாது. டெல்லியில் அமித் ஷாவை மரியாதை நிமித்தமாக சந்தித்தேன். அப்போது தமிழ்நாட்டின் இன்றைய அரசியல் சூழல் குறித்து எடுத்துக் கூறினேன். அவர் கவனமாக கேட்டு, அன்பான வார்த்தைகளை கூறி அனுப்பியுள்ளார்.

பிரிந்திருப்பவர்கள் ஒன்றுபட வேண்டும் என்ற நோக்கத்தில்தான் மத்திய அமைச்சர் அமித் ஷாவை சந்தித்தேன். அதிமுகவினர் ஒன்றுபட வேண்டும் என அமித் ஷாவிடம் கூறினேன். நான் தனிக்கட்சி தொடங்குவேன் என எப்போதும், எந்தச் சூழலிலும் சொல்லவில்லை." என தெரிவித்தார்.



# 9ம் ஆண்டு நினைவு தினம் அனுசரிப்பு: ஜெயலலிதா நினைவிடத்தில் இபிஎஸ், ஓபிஎஸ் இன்று மரியாதை

சென்னை. டிச.6-

முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் 9வது நினைவு தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது.

இதையொட்டி, மெரினா கடற்கரையில் உள்ள அவரது நினைவிடத்தில் அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி, முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் உள்ளிட்டோர் அஞ்சலி செலுத்துகின்றனர்.

முன்னாள் முதல்வரும், அதிமுகவின் பொதுச்செயலாளராகவும் இருந்த ஜெயலலிதாவின் 9வது ஆண்டு நினைவு தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது.

இதையொட்டி, மெரினா கடற்கரையில் உள்ள அவரது நினைவிடத்தில் அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி, இன்று மலர்வளையம் வைத்து, மலர் தூவி அஞ்சலி செலுத்துகிறார்.

அதைத் தொடர்ந்து எம்ஜிஆர், ஜெயலலிதா ஆகியோரது நினைவிட நுழைவாயிலின் உள் பகுதியில் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி நடைபெறுகிறது. இதில் அதிமுக நிர்வாகிகள், முன்னாள் அமைச்சர்கள் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

அதேபோல், முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம், அமமுக பொதுச் செயலாளர் டிடிவி தினகரன், ஜெயலலிதாவின் தோழி சசிகலா உள்ளிட்டோரும் ஜெயலலிதா நினைவிடத்தில் இன்று மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்த உள்ளனர்.

# வழக்கு விசாரணையின்போது வழக்கறிஞர்கள் மீது விழுந்த ஃபால்ஸ்சீலிங் அட்டை: உயர் நீதிமன்றத்தில் பரபரப்பு



சென்னை. டிச.6-


உயர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணையின்போது வழக்கறிஞர்கள் மீது திடீரென கழன்று விழுந்த ஃபால்ஸ்சீலிங் அட்டையால் பரபரப்பு ஏற்பட்டது.

சென்னை உயர் நீதிமன்றத்தில் நீதிபதி ஏ.டி.ஜெகதீஷ் சந்திரா நேற்று வழக்கம்போல வழக்குகளை விசாரித்துக் கொண்டிருந்தார். குற்றவியல் வழக்குகளை அவர் விசாரித்து வருவதால் போலீஸார், வழக்கறிஞர்கள், மனுதாரர்கள் என கூட்டம் நிரம்பி வழிந்தது.

இந்நிலையில் நேற்று பிற்பகலில் அவரது நீதிமன் றத்தில் மேற்கூரையில் மழைநீர் கசிந்து திடீரென ஃபால்ஸ்சீலிங் அட்டை ஒன்று கழன்று வழக்கறிஞர்கள், பார்வையாளர்கள் இருந்த பகுதியில் விழுந்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

அதையடுத்து, யாருக்காவது அடிபட்டுள்ளதா என நீதிபதி கேள்வி எழுப்பினார். யாருக்கும் அடிபடவில்லை என வழக்கறிஞர்கள் தெரிவித்ததால் நீதிமன்ற ஊழியர்கள் வரவழைக்கப்பட்டு அந்த அட்டை அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்டது. அப்போது நீதிபதி, வழக்கறிஞர்களை பார்த்து நீங்கள் நல்ல வழக்கறிஞர்கள் என்பதால் உங்களுக்கு அடிபடவில்லை என்றதும் சிரிப்பலை எழுந்தது

# புழல் மகளிர் சிறையில் கைதிகள் இடையே மோதல்: திருநங்கை மீது வழக்கு பதிவு




சென்னை. டிச.6-

சென்னை: புழல் மகளிர் சிறையில் கைதிகள் மோதிக் கொண்ட விவகாரத்தில் திருநங்கை மீது போலீஸார் வழக்கு பதிவு செய்துள்ளனர்.

சென்னை புழல் மத்திய சிறை வளாகத்தில் பெண் கைதிகளை அடைக்க தனிச் சிறை உள்ளது.

சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் பல்வேறு குற்ற வழக்குகளில் கைது செய்யப்படும் பெண்கள் இந்த சிறையில் அடைக்கப்படுகின்றனர்.

இந்த நிலையில், ஒரு குற்ற வழக்கில் கைது செய்யப்பட்டு, புழல் சிறையின் 6வது பிளாக்கில் அடைக்கப்பட்டுள்ள திருநங்கை அபி என்ற ராஜேஷுக்கும் (36), வின்சி லவ்லி (27), மஞ்சு (26) ஆகிய கைதிகளுக்கும் இடையே நேற்று முன்தினம் வாக்குவாதம் ஏற்பட்டு, மோதலாக மாறியுள்ளது.

தண்ணீர் பிடிக்கும் குவளையால் திருநங்கை அபி தாக்கியதில், வின்சி, மஞ்சு ஆகிய 2 பேருக்கும் ரத்தக் காயம் ஏற்பட்டது. இதையடுத்து, அவர்கள் இருவரும் சிறையில் உள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இதுகுறித்து புழல் காவல் நிலையத்தில் சிறைத் துறை அதிகாரிகள் புகார் கொடுத்தனர். அதன்பேரில், திருநங்கை அபி மீது போலீஸார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# கடந்த 2 மாதங்களில் 60 ஆயிரம் மருத்துவ முகாம்கள்: அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்



சென்னை. டிச.6-

வடகிழக்குப் பருவ மழையால், கிண்டி ரேஸ் கோர்ஸ் வளாகத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள 4 குளங்களில் நீர் நிறைந்துள்ளதை சுகாதாரத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று பார்வையிட்டார்.

அப்போது செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: சென்னையில் 160.86 ஏக்கர் நிலப்பரப்பை கொண்ட கிண்டி ரேஸ் கோர்ஸ் மைதானத்தை அரசு கையகப்படுத்திஉள்ளது. இதில், 118 ஏக்கரில் ஒரு சுற்றுச்சூழல் பூங்கா அமைக்கும் பணிகள் தொடங்கப்பட்டு வேகமாக நடைபெற்று வருகின்றன.

இந்த சுற்றுச்சூழல் பூங்காவில், மழைநீர் சேமிக்கும் வகையில் புதிதாக 4 குளங்கள் வெட்டப்பட்டுள்ளன. ஏற்கெனவே இந்த மைதானத்தில் 2 பெரிய குளங்கள் இருந்தன. அவை தூர்வாரி அகலப்படுத்தப்பட்டுள்ளன.

அந்தவகையில், 24.50 கோடி லிட்டர் மழை நீரை சேர்த்து வைக்கக்கூடிய அளவுக்கு 6 குளங்கள் பயன்பாட்டுக்கு வந்துள்ளன. வேளச்சேரி பெருங்குடி சாலையில் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு நீர்ப் பாதை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அங்கு இருந்த உபரி நிலங்களில் 3.50 ஏக்கர் நிலப்பரப்பில் இரண்டு பெரிய குளங்கள் வெட்டப்பட்டன. அங்கு 4.25 கோடி லிட்டர் மழைநீர் தேக்கி வைக்கப்பட்டு பயன்படுத்தப்படுகிறது.

தமிழகத்தில் மழைக்காலங்களில் ஏற்படும் சாதாரண காய்ச்சல் போன்ற பாதிப்புகள் மட்டுமே உள்ளன. தொற்று நோய் பாதிப்புகள் இல்லை. தேவையான இடங்களில் மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்களை தொடர்ச்சியாக நடத்தி வருகிறோம்.

அக்.16ம் தேதி முதல் இதுவரை நடமாடும் வாகனங்கள், மருத்துவக் குழுக்கள் மூலமாக 59,911 மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு உள்ளன. இவ்வாறு அவர் கூறினார்.

# அதிக குளிரால் முதியோருக்கு முகவாதம் ஏற்பட வாய்ப்பு: அரசு மருத்துவர் எச்சரிக்கை



சென்னை, டிச.6-

அதிக குளிர் காரணமாக முதியோருக்கு 'முக வாதம்' ஏற்பட வாய்ப்பு இருப்பதாக அரசு மருத்துவர் எச்சரித்துள்ளார்.

இதுகுறித்து சிவகங்கை அரசு பொது நல மருத்துவர் அ.ப.பரூக் அப்துல்லா கூறியதாவது: முகத்துக்கு உணர்வு அளிக்கும் நரம்பில் ஏற்படும் அழுத்தம், அழற்சி, வைரஸ் தொற்று ஆகியவற்றால் ஏற்படும் பிரச்சினை தான் முக வாதம் எனப்படுகிறது.

எனவே குளிர்ந்த தரையில், பாய், தலையணை உள்ளிட்ட விரிப்பு இல்லாமல் படுப்பதையும், ஒரு பக்க கன்னத்தை நேரடியாக குளிர்ந்த தரையில் வைத்துப் படுப்பதையும் முதியவர்கள் தவிர்க்க வேண்டும்.

நேரடியாக முகத்தை தரையில் வைத்து படுப்பதன் வாயிலாக, முக நரம்பு அழுத்தப்பட்டு முகவாதம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. அதேபோல் கார், பேருந்து, ரயில் பயணங்களில் அதிக நேரம் குளிர்ந்த காற்று காது, கன்னத்தில் படுமாறு பயணித்தாலும், முகவாதத்தை ஏற்படுத்தும்.

'ஏசி' பயன்பாடாக இருந்தாலும் நேரடியாக குளிர்ந்த காற்று முகத்தில் படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.இப்பாதிப்பில் கண்கள் திறந்தே இருக்கும் என்பதால், வறண்டு விடாமல் இருக்க சொட்டு மருந்து பயன்படுத்தலாம்.

மேலும் பகலில் கண்ணாடியும், இரவில் மூடு கவசமும் அணியலாம். திரவ, திட உணவாக இல்லாமல், கரைத்த கஞ்சியாக உட்கொள்ளலாம். இவ்வாறு அவர் கூறினார்.

# தமிழகத்தில் 7 நாட்களுக்கு மிதமான மழை தொடரும்: திருநெல்வேலி, தென்காசிக்கு கனமழை எச்சரிக்கை

சென்னை, டிச.6-

தமிழகத்தில் இன்று முதல் அடுத்த 7 நாட்களுக்கு மிதமான மழை தொடரும். திருநெல்வேலி, தென்காசியில் இன்று கனமழை பெய்ய வாய்ப்புள்ளது என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்து உள்ளது.



இது குறித்து சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட அறிக்கை: தென்மேற்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதனால், தமிழகத்தில் திருநெல்வேலி, தென்காசியில் கனமழை பெய்யக்கூடும்.

தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இன்று இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். தமிழகத்தில் ஓரிரு இடங்களில் நாளை (டிச.,06) முதல் டிசம்பர் 11ம் தேதி வரை மிதமான மழை தொடரும். இவ்வாறு வானிலை மையம் கூறியுள்ளது.

# எழும்பூர் ரயில் நிலைய மறுசீரமைப்பு பணிகள்: டிச.15 வரை 4 விரைவு ரயில்கள் தாம்பரத்தில் இருந்து இயக்குவது நீட்டிப்பு



சென்னை. டிச.6-

எழும்பூர் ரயில் நிலையத்தில் மறுசீரமைப்பு பணிகள் நடைபெறுவதால், ராமேசுவரம், தஞ்சாவூர், கொல்லம் உட்பட 4 விரைவு ரயில்கள் தாம்பரத்தில் இருந்து இயக்குவது டிச.15ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து தெற்கு ரயில்வே வெளியிட்ட செய்திக்குறிப்பு: எழும்பூர் ரயில் நிலையத்தில் நடைபெற்று வரும் மறுசீரமைப்பு பணிகள் காரணமாக, விரைவு ரயில்களின் சேவையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளன. அதன்படி, சில ரயில்கள் தாம்பரம், கடற்கரையில் இருந்து தற்காலிகமாக இயக்கப்படுகின்றன.

இதற்கிடையே, பணிகள் இன்னும் முடியாத நிலையில், சில ரயில்கள் தாம்பரத்தில் இருந்து இயக்குவது நீட்டிக்கப்பட்டுள்ளது. இதன்படி, தஞ்சாவூர் சென்னை உழவன் விரைவு ரயில்(16866), கேரள மாநிலம் கொல்லம் – எழும்பூர் அனந்தபுரி விரைவு ரயில் (20636) முதல் டிச.14ம் தேதி வரையிலும் தாம்பரம் வரை இயக்கப்படும் இதுபோல, ராமேசுவரம் – சென்னை எழும்பூர் சேது விரைவு ரயில் (22662), ராமேசுவரம் – எழும்பூர் விரைவு ரயில் (16752) இன்று (5ம் தேதி) முதல் டிச.14ம் தேதி வரையிலும் தாம்பரம் வரை இயக்கப்படும்.

இதேபோல, மேற்கண்ட 4 விரைவு ரயில்களும் டிச.6ம் தேதி முதல் டிச.15ம் தேதி வரையில், சென்னை எழும்பூருக்கு பதிலாக தாம்பரத்தில் இருந்து இயக்கப்படும். இதுதவிர, சென்னை எழும்பூர் – மும்பை சிஎஸ்டி விரைவு ரயில் (22158) நாளை (6ம் தேதி) முதல் டிச.15ம் தேதி வரை சென்னை கடற்கரையில் இருந்து இயக்கப்படும்.

குஜராத் மாநிலம் அகமதாபாத் – திருச்சிக்கு வியாழன் தோறும் இயக்கப்படும் வாராந்திர விரைவு ரயில் (09419) டிச.11ம் தேதி அன்று காட்பாடி, வேலூர், விழுப்புரம் என மாற்றுப் பாதையில் செல்வதால், எழும்பூர், தாம்பரம், செங்கல்பட்டுக்கு செல்லாது.

மறுமார்க்கத்தில் திருச்சி அகமதாபாத்துக்கு டிச.7, 14 ஆகிய தேதிகளில் இயக்கப்படும் விரைவு ரயில் (09420), வேலூர், காட்பாடி, மேல்பாக்கம், திருத்தணி வழியாக திருப்பி விடப்படுவதால், செங்கல்பட்டு, தாம்பரம், சென்னை எழும்பூர், பெரம்பூர், அரக்கோணத்துக்கு செல்லாது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திருப்பரங்குன்றம் விவகாரம்: டிச.7ல் இந்து முன்னணி மாநிலம் தழுவிய ஆர்ப்பாட்டம்



திருப்பூர் டிச.6-

திருப்பரங்குன்றம் தீபத்தூணில் தீபம் ஏற்ற அனுமதி மறுத்ததைக் கண்டித்து வரும் 7ம் தேதி தமிழ்நாடு முழுவதும் ஆர்ப்பாட்டம் நடத்துவதாக இந்து முன்னணி அறிவித்துள்ளது.

இந்து முன்னணி மாநிலத்தலைவர் காடேஸ்வரா சி.சுப்பிரமணியம் திருப்பூரில் இன்று செய்தியாளரிகளிடம் பேசியதாவது: கடந்த 2 நாட்களாக தமிழக அரசு மக்களின் பக்தியை அவமதித்து வருவதைக் கண்டிக்கிறோம். உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியும் அதனை சிறிதுகூட மதிக்காமல் அரசியல் சாசனத்துக்கு எதிராக காவல்துறை செயல்பட்டு வருகிறது. திமுகவின் இந்து விரோத நடவடிக்கைகளை திசை திருப்ப பல்வேறு தில்லு, முல்லு வேலைகளை தமிழக அரசு மேற்கொண்டு வருகிறது.

காவல்துறை நீதிமன்ற உத்தரவை அனுமதிக்காமல் முட்டுக்கட்டை போட்டு நடந்து கொண்டது கடமை தவறிய நடவடிக்கை. 1996ம் ஆண்டு உயர் நீதிமன்றம் திருப்பரங்குன்றம் மலைமீது கோயில் நிர்வாகம் தீபம் ஏற்ற தீர்ப்பு வழங்கியது. 2014ம் ஆண்டு நீதிமன்றம் மலை மீது எங்கும் தீபம் ஏற்றலாம். அதனை கோயில் நிர்வாகம் செய்யலாம் என்று கூறியது. 2015ம் ஆண்டு தர்கா நிர்வாகம் மலையில் தீபம் ஏற்ற ஆட்சேபனை இல்லை என நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்துள்ளது.

கடந்த 30 ஆண்டுகளாக நீதிமன்ற தீர்ப்பை அமல்படுத்தாத கோயில் நிர்வாகம் மற்றும் இந்து சமய அறநிலையத் துறையை எதிர்த்து தான் இப்போது வழக்கு நடந்து அதில் தீர்ப்பு கூறப்பட்டுள்ளது.

நீதிமன்ற விஷயத்தில் சட்டத்துறை அமைச்சர் ரகுபதி தவறான தகவலைச் சொல்கிறார். மற்ற மத பண்டிகைகளுக்கு வாழ்த்துச் சொல்லும் திமுக அரசு, விநாயகர் சதுர்த்திக்கு, தீபாவளிக்கு வாழ்த்து சொல்வதில்லை. மதச்சார்பின்மை என்று சொல்லிக்கொண்டு திமுக வேடம் போடுகிறது.

நாங்கள் மதக்கலவரத்தை தூண்டவில்லை. அங்கு எழுந்த சலசலப்புக்கும் போலீஸார் தான் காரணம். தமிழ்நாட்டில் சட்டம் மற்றும் ஒழுங்கு மிக மோசமாக உள்ளது. அதனை மறைக்கவே, திருப்பரங்குன்றத்தை திமுக அரசு கையில் எடுத்துள்ளது.

திமுகவின் மக்கள் விரோத, சட்டவிரோத செயல்பாட்டை கண்டித்தும் திருப்பரங்குன்றத்தில் தீபம் ஏற்ற வலியுறுத்தியும் வரும் 7ம் தேதி பக்தர்களை இணைந்து மாநிலம் தழுவிய ஆர்ப்பாட்டம், அனைத்து மாவட்டங்களிலும் நடைபெறுகிறது. மதுரையின் வளர்ச்சியை யாரும் தடுக்கவில்லை. பல கோயில்களில் ஊழல்கள் நடந்துள்ளது. அதன்மீது தமிழக அரசு நடவடிக்கை எடுக்கவில்லை. இவ்வாறு அவர் தெரிவித்தார். இதில் மாநில செயலாளர் கிஷோர்குமார் உட்பட பலர் பங்கேற்றனர்.

# திண்டுக்கல் மு.ஆசாரிப்புதூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலை அரசு பள்ளி மாணவி மாநில அளவில் சாதனை

திண்டுக்கல், டிச.6-

திண்டுக்கல் மாவட்டம் ரெட்டியார்சத்திரம் ஒன்றியம் மு.ஆசாரிப்புதூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் 8 ஆம் வகுப்பு மாணவி மு.யோகஸ்ரீ சென்ற மாதம் மாவட்ட அளவில் தனி நபர் நடிப்பில் முதலிடம் பெற்று கடந்த 26.11.2025 கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூரில் அதியமான் பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற மாநில அளவிலான கலைத் திருவிழா போட்டியில் மாணவி கலந்து கொண்டு *மாநில அளவில் 2_ம் இடம் பெற்று அரசுப் பள்ளி மாணவி சாதனை படைத்துள்ளார்.

பள்ளி மேலாண்மை குழு கூட்டம் பள்ளியில் நடைபெற்றது. அப்போது மாநில அளவில் வெற்றி பெற்ற மாணவிக்கு திண்டுக்கல் ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி உதவி திட்ட அலுவலர் F.திருப்பதி M.A.,M.Ed.M. Phil., அவர்களும், திண்டுக்கல் மாவட்ட சமக்ரா சிக்க்ஷா மாவட்ட ஒருங்கிணைப்பாளர்



A. சுதாகர் M.Sc., M. Phil .,B. Ed அவர்களும் வருகை புரிந்து பள்ளி மேலாண்மை குழுவை பார்வையிட்டு மாணவிக்கு கேடயம் வழங்கி சிறப்பித்தார்கள்.

மாணவிக்கு பயிற்சி அளித்த ஆசிரியை கா.கோகிலா தேவி அவர்களையும் பாராட்டி கேடயம் வழங்கி கௌரவித்தார். மாவட்ட அளவில் இரண்டாம் இடம் பெற்ற மாணவி பி. அபி ரிதன்யாவுக்கும் கேடயம் வழங்கி சிறப்பித்தார்..

உடன் பள்ளி தலைமை ஆசிரியர் நா. இராகவன், உதவி ஆசிரியர்கள் சி.கார்த்திக்,சி. ச.மகேஸ்வரி, இரா.நாகலட்சுமி, மற்றும் SMC உறுப்பினர்கள் உடன் இருந்தனர்.

பள்ளியின் பெருமையை பறைசாற்றும் வண்ணம் பள்ளித் தலைமை ஆசிரியர் அவர்கள் உதவி திட்ட அலுவலரிடம் எடுத்துரைத்தார்.

பள்ளி மிகவும் சிறப்பாக உள்ளது என உதவி திட்ட அலுவலர் பாராட்டி பள்ளி மேலும் பல விருதுகளை பெற வாழ்த்துக்களை தெரிவித்தார்.

# சாலைகளில் பிச்சை எடுக்க குழந்தைகளை பயன்படுத்துவதை தடுக்க வேண்டும்: அரசுக்கு ஐகோர்ட் உத்தரவு



சென்னை. டிச.6-

சாலைகளில் பிச்சை எடுக்க குழந்தைகளை பயன்படுத்துவதை தடுக்க உரிய நடைமுறைகளை வகுக்க வேண்டும் என தமிழக அரசுக்கு சென்னை உயர் நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.

சென்னை சாலைகளில் குழந்தைகளுடன் பிச்சை எடுக்கும் தாய்மார்கள், உண்மையிலேயே அந்த குழந்தைகளின் தாய் தானா என்பதை கண்டறிய விசாரணை நடத்த உத்தரவிடக் கோரி, சென்னையைச் சேர்ந்த வழக்கறிஞர் தமிழ்வேந்தன் உயர் நீதிமன்றத்தில் பொதுநல வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

அந்த மனுவில், சாலை சிக்னல்களில் குழந்தைகளுடன் பிச்சை எடுக்கும் பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் எந்த உருவ ஒற்றுமையும் இல்லை. பிச்சை எடுக்க பயன்படுத்தும் குழந்தைகள் எந்நேரமும் தூங்கிக் கொண்டிருப்பது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது எனக் கூறப்பட்டுள்ளது.

வெயில், வாகன சத்தத்துக்கு கூட அந்தக் குழந்தைகள் கண்முழிப்பது இல்லை. அதனால் குழந்தைகளுக்கு தூக்க மாத்திரை கொடுக்கப்பட்டிருக்கிறதா?, வேறு மருந்துகள் அல்லது ஆல்கஹால் கொடுக்கப்பட்டிருக்கிறதா என கண்டறிய வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிச்சை எடுக்கும் பெண்கள் பெரும்பாலும் தமிழில் பேசுவதில்லை. குழந்தைகளை வேறு இடங்களில் இருந்து கடத்தி வந்து பிச்சை எடுக்க பயன்படுத்தப்படுகிறதா? பின்னணியில் செயல்படுவோர் யார் என்பதை கண்டறிய விசாரணை நடத்தப்பட வேண்டும். இதுசம்பந்தமாக அளித்த மனுவை பரிசீலித்து, குழந்தைகளை மீட்க உத்தரவிட வேண்டும் என மனுவில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கை விசாரித்த தலைமை நீதிபதி எம்.எம்.ஸ்ரீவஸ்தவா மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் அடங்கிய அமர்வு, இதுபோன்ற செயல்களை தடுக்க உரிய நடைமுறைகளை வகுக்க வேண்டும் என தமிழக அரசுக்கு அறிவுறுத்தியது.

மேலும், மனுவுக்கு பதிலளிக்கும்படி, அரசுக்கு உத்தரவிட்ட நீதிபதிகள், விசாரணையை டிசம்பர் 11ம் தேதிக்கு தள்ளிவைத்துள்ளனர்.

# ஜல்லிக்கட்டு காளைகளுக்கு காப்பீடு திட்டம் முதன்முறையாக அறிமுகம்



மதுரை. டிச.6-

முதன் முறையாக ஜல்லிக்கட்டு காளைகளுக்கு, காப்பீடு செய்யும் நடைமுறை விரைவில் அறிமுகம் செய்யப்பட உள்ளது. பொங்கல் பண்டிகை முதல் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் ஜல்லிக்கட்டு நடக்கும்.

இதற்காக பலரும் காளைகளை ஆண்டு முழுவதும் பராமரித்து தயார்படுத்தி வருகின்றனர். கால்நடைகளைப்போல் ஜல்லிக்கட்டு காளைகளுக்கு காப்பீடு வசதி இதுவரை வழங்கப்படவில்லை.

இந்நிலையில் யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனம், முதன்முறையாக பால் தரும் பசுமாடு, எருமை மாடுகளை அடுத்து ஜல்லிக்கட்டு காளைகளுக்கும் காப்பீடு செய்யும் திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது.

இதுகுறித்து அந்நிறுவனத் தின் ஆலோசகரும், கால்நடை மருத்துவருமான என்.கே.புத்தன் கூறியதாவது: ஜல்லிக்கட்டு காளைகளுக்கும் சந்தை மதிப்பீட்டு தொகையை வழங்க காப்பீடு கால்நடைகள் பட்டியலில் இடம்பெற உள்ளது. பொதுவாக காப்பீடு செய்த பசுமாடு, எருமை மாடுகளுடைய காதில் அடையாள குறியீடு (தோடு) அணிவர்.

ஆனால், ஜல்லிக்கட்டு காளைகள் போட்டிகளில் பங்கேற்பதால் அதுபோன்று தோடு அணிய முடியாது. அதனால், ஜல்லிக்கட்டு காளைகளுக்கு புதிய தொழில்நுட்ப அடிப்படையில் அதன் மூக்குப் பகுதியில் உள்ள ரேகையை ஸ்கேன் செய்து காப்பீடு செய்ய ஏற்பாடு செய்துள்ளோம்.

காளைகளின் மூக்குப் பகுதி ரேகை மாட்டுக்கு மாடு வேறுபடும். ஓரிரு வாரங்களில் ஜல்லிக்கட்டு காளைகள் காப்பீட்டு திட்டத்தில் ஓராண்டுக்கு சேர்க்கப்பட உள்ளன. எப்படி கால்நடைகள் இறப்பதற்கு காப்பீடு தொகை வழங்கப்படுகிறதோ அதுபோல சந்தை மதிப்பீடு தொகையை வழங்க ஏற்பாடு செய்யப்படுகிறது.

ஓராண்டுக்கு காப்பீடு செய்த ஜல்லிக்கட்டு காளைகளுக்கு எந்த பாதிப்பும் வராமல் இருந்தால், தொடர்ந்து அடுத்தடுத்த ஆண்டுகளில் 3 ஆண்டு முதல் 10 ஆண்டுகள் வரை காப்பீடு செய்யப்பட உள்ளது.

ஜல்லிக்கட்டு காளைகள் 3 வயதில் இருந்துதான் போட்டிகளில் பங்கேற்க ஆரம்பிக்கிறது. அதனால், 3 வயதில் இருந்து அவற்றை காப்பீடு செய்யும் நடைமுறை தொடங்கப்பட்டுள்ளது. காளை ஏதாவது காரணத்தால் உயிரிழந்தால் இடைத்தரகர் இன்றி நேரடியாக காளை உரிமையாளர் வங்கிக் கணக்கில் இழப்பீடு தொகை செலுத்தப்படும்.

ஒரு லட்ச ரூபாய் மதிப்புள்ள காளைக்கு ரூ.6 ஆயிரம் வரை பிரீமியம் தொகை செலுத்த வேண்டி இருக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

# துபாய்ஹைதராபாத் எமிரேட்ஸ் விமானத்திற்கு வெடிகுண்டு மிரட்டல்; அவசர தரையிறக்கம்



ஹைதராபாத், டிச.6-

துபாய்ஹைதராபாத் விமானத்திற்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டது, பயணிகள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியது.

துபாயில் இருந்து ஹைதராபாத்துக்கு ஹைதராபாத்துக்கு ணிரி 526 என்ற எமிரேட்ஸ் விமானம் புறப்பட்டது. விமானம் நடுவானில் பறந்து கொண்டிருந்த போது, அதில் வெடிகுண்டு வைக்கப்பட்டு இருப்பதாக விமான நிறுவனத்திற்கு ஒரு இ மெயில் வந்தது.

மிரட்டலை அடுத்து, விமான நிலைய பாதுகாப்பு குழுவினர் உடனடியாக செயலில் இறங்கினர். ஹைதராபாத் விமான நிலையத்தில் மிகவும் பாதுகாப்புடன் விமானம் இறக்கப்பட்டது. அதன் பின்னர், உடனடியாக பாதுகாப்பு நடவடிக்கைகளை அதிகாரிகள் தொடங்கினர்.

அனைத்து பயணிகளையும், அவர்களின் உடமைகளையும் தனிமைப்படுத்தினர். தீயணைப்புத் துறையினர் வரவழைக்கப்பட்டு சோதனைகள் நடத்தப்பட்டன. இந்த சோதனையில் மோப்ப நாய்களும் பயன்படுத்தப்பட்டன.

பல மணி நேரம் நீடித்த இந்த சோதனையில் எவ்வித வெடிகுண்டுகளும் கண்டுபிடிக்கப்படவில்லை. இதையடுத்து, பயணிகள் அனைவரையும் பாதுகாப்பாக அனுப்பி வைத்தனர்.

நேற்றைய தினம், மதீனாஹைதராபாத் விமானத்துக்கு இருமுறை இ மெயில் மூலமாக வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டது. உடனடியாக, அந்த விமானத்தை அதிகாரிகள் குழுவினர், ஆமதாபாத்திற்கு திருப்பி விட்டனர்.



# திருப்பரங்குன்றம் விவகாரம்: மாநிலங்களவையில் இருந்து திமுக எம்பிக்கள் வெளிநடப்பு

புதுடெல்லி, டிச.6-

திருப்பரங்குன்றம் விவகாரம் குறித்து விவாதிக்க வலியுறுத்தி மாநிலங்களவையில் எதிர்க்கட்சி எம்பிக்கள் முழக்கம் எழுப்பிய நிலையில், திமுக எம்பிக்கள் வெளிநடப்பு செய்துள்ளனர்.

திருப்பரங்குன்ற விவகாரம் தமிழகம் மட்டுமன்றி, நாடாளுமன்றம் வரை தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதனை பதவியில் இருந்து நீக்க வேண்டும் என அரசியல் கட்சி தலைவர்கள் கூறிவரும் நிலையில், திருப்பரங்குன்ற மலையில் தீபம் ஏற்றும் விவகாரத்தில் 'தமிழகத்தில் மத நல்லிணக்கத்தை சீர்குலைக்க மதவாத சக்திகள் முயற்சி' என ஒரு தரப்பினரும், 'இந்துக்களுக்கு விரோதமாக செயல்படும் திமுக அரசு' என்று இன்னொரு தரப்பினரும் கருத்துகளை முன்வைத்து வருகின்றனர்.

இந்நிலையில், திருப்பரங்குன்றம் விவகாரம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்தக்கோரி திமுக எம்.பிக்கள் சார்பில் ஒத்திவைப்பு தீர்மானம் நோட்டீஸ் அளிக்கப்பட்டது. திமுகவின் மக்களவை குழு தலைவர் டி.ஆர்.பாலு மற்றும் மாநிலங்களவை குழு தலைவர் திருச்சி சிவா ஆகியோர் ஒத்திவைப்பு தீர்மானம் நோட்டீஸ் வழங்கினார்.

இதேபோல் காங்கிரஸ் எம்.பி. மாணிக்கம் தாகூரும் ஒத்திவைப்பு தீர்மான நோட்டீஸ் வழங்கினார். இந்நிலையில், இரு அவைகளிலும் திருப்பரங்குன்றம் விவகாரம் தொடர்பாக திமுக மற்றும் கூட்டணி கட்சி எம்பிக்கள் தொடர் முழக்கம் எழுப்பினர்.

ஆனால், திருப்பரங்குன்றம் விவகாரத்தில் ஒத்திவைப்பு நோட்டீஸை ஏற்க முடியாது என மாநிலங்களவை தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் மறுத்ததால், திமுக உள்ளிட்ட கூட்டணிக் கட்சி எம்பி.,க்கள் வெளிநடப்பு செய்தனர்.

மேலும், திருப்பரங்குன்ற விவகாரம் தொடர்பாக மக்களவையில் விவாதிக்க வேண்டும் என திமுக கூட்டணி கட்சி எம்பிக்கள் கோரிக்கை வைத்த நிலையில், சபாநாயகர் ஓம் பிர்லா அதை மறுத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# குழந்தைத் திருமணங்களை தடுக்க 100 நாள் விழிப்புணர்வு பிரச்சாரம் மத்திய அமைச்சர் அன்னபூர்ணா தேவி தொடங்கி வைத்தார்



புதுடெல்லி, டிச.6-

குழந்தைத் திருமணங்களைத் தடுக்க 100 நாள் தீவிர விழிப்புணர்வு பிரச்சாரத்தை மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அன்னபூர்ணா தேவி நேற்று தொடங்கி வைத்தார்.

பின்னர் அவர் பேசியதாவது: குழந்தைத் திருமணங்களைத் தடுக்க 1929ம் ஆண்டு சாரதா சட்டம் கொண்டுவரப்பட்டது. அதன்பிறகு அவ்வப்போது இந்த சட்டம் பலப்படுத்தப்பட்டு வருகிறது. கடைசியாக கடந்த 2006ம் ஆண்டு இயற்றப்பட்ட சட்டம் இப்போது அமலில் உள்ளது. ஆனாலும் இந்த முறை இன்னமும் சில இடங்களில் நீடிக்கிறது.

குழந்தைத் திருமணங்களை நாட்டு மக்கள் சகித்துக் கொள்ளக்கூடாது. நம் நாட்டில் நடைபெறும் ஒரு குழந்தைத் திருமணத்தைக் கூட ஏற்றுக் கொள்ளக் கூடாது. எனவே, இந்த நடைமுறையை ஒழிக்க மாநில அரசுகள், சமூகக் குழுக்கள் மற்றும் சமூக தலைவர்கள் ஒன்றிணைந்து அர்ப்பணிப்பு உணர்வுடன் செயல்பட வேண்டும்.

குழந்தைத் திருமணம் என்பது வெறும் சட்ட மீறல் மட்டுமல்ல. அது ஒரு மகளின் குழந்தைப் பருவத்தையே பறித்து, அவளை சிறு வயதிலேயே குழந்தை பெற்றுக் கொள்ள வேண்டிய நிலைக்கு தள்ளுகிறது. இதனால் கற்பனை செய்ய முடியாத துன்பத்தை சிறுமிகள் அனுபவிக்க வேண்டி உள்ளது.

பெண் குழந்தைகளை பாதுகாப்போம், பெண் குழந்தைகளுக்கு கல்வி அளிப்போம் என்ற மத்திய அரசின் முயற்சிக்கு நல்ல பலன் கிடைத்துள்ளது. குறிப்பாக, பாலின விகிதம் அதிகரித்து வருவதுடன் உயர்கல்வியில் பெண்கள் சேர்க்கை அதிகரித்துள்ளது.

நமது மகள்கள் முன் எப்போதும் இல்லாத வகையில் வேகமாக முன்னேறி வருகிறார்கள். குறிப்பாக, விளையாட்டு, ராணுவம், சுரங்கம், விண்வெளி உட்பட அனைத்து சவாலான பணிகளிலும் பெண்கள் வரலாறு படைத்து வருகின்றனர். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# ஹிந்து மக்களின் வழிபாட்டு உரிமையை பறித்துள்ளது திமுக அரசு; பார்லியில் எல்.முருகன் குற்றச்சாட்டு



புதுடில்லி. டிச.6-

'ஓட்டு அரசியலுக்காக, ஒரு குறிப்பிட்ட சமுதாய மக்களை தாஜா செய்ய வேண்டும் என்ற நோக்கோடு, ஹிந்து மக்களின் வழிபாட்டு உரிமையை திமுக அரசு பறித்துள்ளது,' என்று லோக்சபாவில் மத்திய இணையமைச்சர் எல்.முருகன் குற்றம்சாட்டியுள்ளார்.

திருப்பரங்குன்றம் விவகாரத்தை லோக் சபாவில் திமுக எம்பிக்கள் எழுப்பினர். அப்போது, திமுக எம்பி டி.ஆர். பாலு பேசுகையில், 'தமிழகத்தில் அமைதியை சீர்குலைக்க திட்டமிடுகின்றனர்,' என்று கூறி, நீதிபதி சுவாமிநாதன் பற்றி சர்ச்சைக்குரிய வகையில் பேசினார்.

இவ்வாறு டி.ஆர். பாலு கூறியதற்கு பார்லி விவகாரத்துறை அமைச்சர் கிரண் ரிஜிஜூ கடும் எதிர்ப்பு தெரிவித்தார். நீதித்துறையை அவர் அவமதித்ததாகக் குற்றம் சாட்டினார். இதையடுத்து, டிஆர் பாலுவின் பேச்சு அவைக்குறிப்பில் இருந்து நீக்கப்படுவதாக சபாநாயகர் அறிவித்தார்.

அதன்பிறகு, திமுக எம்பிக்களின் கேள்விக்கு பதிலளித்து பேசிய மத்திய இணையமைச்சர் எல்.முருகன், ஹிந்து மக்களின் வழிபாட்டு உரிமையை திமுக அரசு பறித்துள்ளதாக என்று குற்றம்சாட்டினார்.

அவர் பதிலளித்து பேசியதாவது ; மதுரை திருப்பரங்குன்றத்தில் திமுக அரசு, மக்களை வழிபடுவதை தடுத்து இருக்கிறது. நீதிமன்றம் உத்தரவிட்ட பிறகும், தமிழக அரசும், போலீசாரும் அதனை மதிக்காமல், மக்களை தடுத்து நிறுத்தியுள்ளார்கள். மக்களின் வழிபாட்டு உரிமை பறிக்கப்பட்டுள்ளது. சிஎஸ்ஐஎப் உதவியுடன் தீபம் ஏற்ற நீதிபதி உத்தரவிட்டார். ஆனால், அங்கு சென்றவர்களை போலீசார் கைது செய்து அராஜகத்தில் ஈடுபட்டுள்ளது திமுக அரசு. மக்களின் வழிபாட்டு உரிமையை தடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஓட்டு அரசியலுக்காக, ஒரு குறிப்பிட்ட சமுதாய மக்களை தாஜா செய்ய வேண்டும் என்ற நோக்கோடு, ஹிந்து மக்களின் வழிபாட்டு உரிமையை பறித்துள்ளது திமுக அரசு.

சட்டம் ஒழுங்கு முழுமையாக சீர்குலைந்துள்ளது. போலீசார் சட்டம் ஒழுங்கை காப்பாற்றுவதை விட்டு, வழிபாடு நடத்த செல்லும் மக்களின் மீது தாக்குதலை நடத்தியுள்ளனர். பாஜ தலைவர் உள்ளிட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர். நீதிமன்றத்தின் தீர்ப்பை நடைமுறைப்படுத்த வேண்டும். நீதித்துறையின் மீது நம்பிக்கை இருக்கிறதா? இல்லையா? இரு நீதிபதிகள் சொன்ன பிறகும், மக்களை தீபம் ஏற்ற அனுமதி வழங்கவில்லை.

இந்திய அரசியலமைப்பு சட்டத்தில் ஒவ்வொருவருக்கும் அடிப்படை உரிமை வழங்கப்பட்டு இருக்கிறது. சுதந்திரமாக சென்று வழிபடும் உரிமை இருக்கிறது. அந்த அடிப்படை உரிமையை திமுக அரசு தடுக்கிறது. மாநில அளவில் பேசித் தீர்க்க வேண்டிய விஷயத்தை, பார்லிமென்டில் பேசி தொந்தரவு செய்கின்றனர், இவ்வாறு அவர் கூறினார்.



## காந்தி கிராமம் பல்கலைக்கழகத்தில் டாக்டர் டி. எஸ். சௌந்திரம் 36-வது நினைவு மாநில அளவிலான கல்லூரிகளுக்கு இடையேயான கையுந்து பந்து போட்டிகள்

### திருச்சி, ஜமால் முகமது கல்லூரி, முதல் பரிசை பெற்றது

சின்னாளபட்டி, டிச.06-

காந்திகிராமம் பல்கலைக்கழகத்தில் டாக்டர் டி. எஸ். சௌந்திரம் 36-வது நினைவு மாநில அளவிலான கல்லூரிகளுக்கு இடையேயான கையுந்து பந்து போட்டிகள் நடைபெற்றது. மாநில அளவில் நடைபெற்ற போட்டிகளில் திருச்சி, ஜமால் முகமது கல்லூரி, முதல் பரிசை பெற்றது.

திண்டுக்கல் மாவட்டம், காந்தி கிராமம் பல்கலைக்கழகத்தில் டாக்டர் டி. எஸ். சௌந்திரம் 36வது நினைவு மாநில அளவிலான கல்லூரிகளுக்கு இடையேயான கையுந்து பந்து போட்டிகள் நடைபெற்றது. பல்கலைக்கலை துணை வேந்தர் டாக்டர் என். பஞ்சநதம் அவர்கள் போட்டிகளைத் துவக்கி வைத்தார். ஒன்பது அணிகள் நாக்க்அவுட் முறையில் போட்டிகளில் பங்கேற்றன. இதில் முதல் பரிசு ரூ.15 ஆயிரம் மற்றும் பரிசுக்கோப்பையை திருச்சி ஜமால் மொஹமது கல்லூரியும், 2வது பரிசான ரூ. 10 ஆயிரம் மற்றும் பரிசுக்கோப்பையை மதுரை, அமெரிக்கன் கல்லூரியும், 3வது பரிசை கோயம்புத்தூர் விவேகானந்தா பல்கலைக்கழகமும், 4வது பரிசை காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகமும் பெற்றன. முன்னதாக லீக் முறையில் நடைபெற்ற போட்டிகளை பல்கலை பொறுப்பு பதிவாளார் எம். சுந்தரமாரி, மற்றும் தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர் (பொறுப்பு) டாக்டர் கே. எஸ். புஷ்பா ஆகியோர் தொடங்கி வைத்தனர். நிறைவு நாள் நிகழ்சியை போட்டிகள் மற்றும் விளையாட்டுக்.குழு தலைவர் டாக்டர் ஏ. பாலகிருஷ்ணன் நடத்தினார். டாக்டர் டி. எஸ். சௌந்திரம் 36வது நினைவு மாநில அளவிலான கல்லூரிகளுக்கு இடையேயான கையுந்து பந்து போட்டிகளுக்கான ஏற்பாடுகளை பல்கலை உடற்பயிற்சி இயக்குநர் சி.சுகுமார் சிறப்பாக செய்திருந்தார். நிறைவாக டாக்டர் ஆர்.மணி விளையாட்டு வீரர்களை வாழ்த்தியதுடன் நன்றி கூறினார்.




## காந்தி கிராமம் பல்கலைக்கழகத்தில் நீர் மேலாண்மைக்கான புதுமையான தீர்வுகள் குறித்த சர்வதேச கருத்தரங்கு

சின்னாளபட்டி, டிச.06-

காந்தி கிராமம் பல்கலைக்கழகத்தில் நீர் மேலாண்மைக்கான புதுமையான தீர்வுகள் குறித்த சர்வதேச கருத்தரங்கு வெள்ளிவிழா அரங்கில் நடைபெற்றது.

திண்டுக்கல் மாவட்டம், காந்திகிராமம் நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தில் பயன்பாட்டு புவிஅமைப்பியியல் மையம், மற்றும் நிலையான நீர்வள மேலாண்மை மையம், காந்திகிராம் கிராமிய பல்கலைக்கழகம் இணைந்து நீர் மேலாண்மைக்கான புதுமையான தீர்வுகள் - 2025" என்ற சர்வதேச கருத்தரங்கு பல்கலை வெள்ளிவிழா அரங்கில் நடைபெற்றது.

பல்கலை மைய இயக்குநரும், மூத்த பேராசிரியருமான குருஞானம் அவர்களின் வரவேற்புரையுடன் தொடங்கிய நிகழ்ச்சியில் நீர்வள மேலாண்மையில் அறிவியல் புதுமைகளின் அவசியத்தை வலியுறுத்தினார். அதன் பின்னர் பேசிய கணினி அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் புலத்தலைவர் பேராசிரியர் றி. கலாவதி மற்றும் மத்திய நிலத்தடி நீர் வாரியம், சென்னை பிராந்திய இயக்குநர் திரு. ஆ. சிவகுமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கி யதுடன், நீர்வள பிரச்சினைகளை சமாளிக்க தொழில்நுட்ப முன்னேற்றங்களின் பங்களிப்பை எடுத்துரைத்தனர். சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட குவைத் கே.ஐ.எஸ். ஆர் நிறுவனத்தின் ஆராய்ச்சி விஞ்ஞானியும், பேராசிரியருமான சிதம்பரம் அவர்கள் பேசும்போது உலகளாவிய நீர்வளவியல் சவால்கள் மற்றும் புதுமையான தீர்வுகளை கருத்தரங்கில் எடுத்துரைத்தமார். நிறைவாக தலைமையுரை ஆற்றிய பல்கலை துணைவேந்தர் பேராசிரியர் ந.பஞ்சநதம் அவர்கள் கருத்தரங்கில் நீர்வள நிலைத்தன்மைக்கு தமிழகத்தில் உள்ள பல்துறைகளின் ஒத்துழைப்பையும், அதன் அவசியத்தையும் எடுத்துரைத்தார். நிறைவாக உதவி பேராசிரியர் அறிவழகன் நன்றி கூறினார்.




## அலங்காநல்லூர் பெரியஊர்சேரி கிராமத்தில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா நினைவு நாள் விழா

அலங்காநல்லூர், டிச.06-

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே உள்ள பெரியஊர்சேரி கிராமத்தில் அதிமுக முன்னாள் பொதுச் செயலாளர் முன்னாள் முதல்வருமான செல்வி ஜெ.ஜெயலலிதா, அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு அவரது படத்திற்கு அதிமுக ஒன்றிய எம்ஜிஆர் இளைஞரணி இணைச் செயலாளர் செந்தில்குமார், தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இதில் கிளைக் கழக செயலாளர் சந்திரன், ஒன்றிய மகளிரணி செயலாளர் மணிமேகலை, முன்னால் ஒன்றிய கவுன்சிலர் ரேவதி, ஒன்றிய விவசாய அணி துணைச் செயலாளர் பாலமுருகன் ,மற்றும் ஆறுமுகம், குமரேசன், ஞானசேகரன் பக்கிரி மொகம்மது, கோவில்பிச்சை, தவமணி, வீரணன், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## தேனி மாவட்டம் 4ஆவது புத்தகத் திருவிழா - 2025 நடைபெற உள்ள இடத்தில் முன்னேற்பாடு பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் ஆய்வு



தேனி, டிச.06-

தேனி மாவட்டம், தேனி அல்லிநகரம் நகராட்சிகுட்பட்ட நாடார் சரஸ்வதி ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மைதானத்தில் 4ஆவது புத்தகத் திருவிழா நடைபெற உள்ளதை முன்னிட்டு மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாடு பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங்,நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

புத்தகம் வாசிப்பை மக்கள் இயக்கமாக எடுத்துச் செல்ல வேண்டும் என்பதற்காகவும், பல்வேறு வகையான நூல்கள் ஒரே இடத்தில் பொதுமக்களுக்கு எளிதில் கிடைப்பதற்காக தமிழ்நாடு அரசின் சார்பில் புத்தகத் திருவிழா நடத்தப்படுகிறது. அதனடிப்படையில் தேனி மாவட்டத்தில் கடந்த 3 ஆண்டுகளில் புத்தகத் திருவிழா சிறப்பாக நடத்தப்பட்டது. அதன் தொடர்ச்சியாக இந்த ஆண்டு 4ஆவது புத்தகத் திருவிழா நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

அதன்படி, 4ஆவது புத்தகத் திருவிழா நடைபெற உள்ள நாடார் சரஸ்வதி ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மைதனத்தில் புத்தக அரங்குகள், நுழைவாயில் மற்றும் மேடை அமைப்பதற்கான இடம், தீயணைப்பு வாகனம் தயார் நிலையில் நிற்பதற்கான இடம், சிறுவர்களுக்கான பொழுது போக்கு இடம் அமைத்தல், உணவுப்பொருள் விற்பனை கூடங்கள், மகளிர் சுய உதவிக்குழுக்களின் உற்பத்தி பொருட்கள் அரங்குகள், கண்காட்சிகள், தற்காலிக கழிவறை மற்றும் பொதுமக்கள் வாகனங்கள் நிறுத்துவதற்கு தேர்வு செய்யப்பட்டுள்ள இடம் போதுமானதாக உள்ளதா என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்வின் போது, மாவட்ட வருவாய் அலுவலர் ப.ராஜகுமார், துணை காவல் கண்காணிப்பாளர் முத்துக்குமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) முத்துமாதவன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் இரா.நல்லதம்பி, உதவி செயற்பொறியாளர் சரவணக்குமார், உதவி தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை அலுவலர் குமரேசன், நகராட்சி ஆணையாளர் செல்வி பார்கவி, வட்டாட்சியர் சதீஸ்குமார், நூலக கண்காணிப்பாளர் குணசேகரன் உட்பட பலர் உடனிருந்தனர்.



## தமிழக முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் 9ஆம் ஆண்டு நினைவு தினம்

திருப்பூர், டிச.06-

தமிழக முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் 9ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு திருப்பூர் புறநகர் கிழக்கு மாவட்ட கழக செயலாளருமான மடத்துக்குளம் சட்டமன்ற உறுப்பினர் சி.மகேந்திரன் அவர்கள் தலைமையில் மடத்துக்குளம் நால்ரோட்டில் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருஉருவ படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். இதன் தொடர்ச்சியாக கிருஷ்ணாபுரம் தங்கமயில் திருமண மண்டபத்தில் மௌன அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் ஒன்றிய கழகச் செயலாளர்கள், பேரூர் கழகச் செயலாளர்கள், வார்டு கழகச் செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்துக் கொண்டார்கள்.



■ வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் 2026 முன்னிட்டு திருப்பூர் மாவட்டம், திருப்பூர் தெற்கு வட்டம் கருவம்பாளையம் பகுதியில் வாக்குச் சாவடி நிலை அலுவலர்கள் வாக்காளர்களிடமிருந்து பூர்த்தி செய்யப்பட்ட கணக்கெடுப்பு படிவங்கள் பெறப்படும் பணிகளை மாவட்ட தேர்தல் அலுவலர் /மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.மனிஷ் நாரணவரே இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



## தேனி மாவட்டம் உத்தமபாளையம் பகுதியில் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அரசு மினி விளையாட்டு மைதானம் அமைப்பதற்கான பூமி பூஜை

தேனி, டிச.06-

தேனி மாவட்டம் உத்தமபாளையம் பகுதியில் விளையாட்டு போட்டிகளை ஊக்குவிக்கும் விதமாக விளையாட்டு வீரர்களுக்கு அரசு சார்பில் மைதானம் அமைக்க வேண்டும் என கூறி அப்பகுதி விளையாட்டு வீரர்கள் தமிழக அரசிடம் கோரிக்கை வைத்துள்ளனர்.

கோரிக்கையினை ஏற்றுக்கொண்ட தமிழக அரசு ரூபாய் மூன்று கோடியே 40 லட்சம் மதிப்பீட்டில் அரசு விளையாட்டு மைதானம் அமைக்க நிதி ஒதுக்கீடு செய்துள்ளனர். அதற்கான பணிகளை தொடங்கும் விதமாக கம்பம் எம்.எல்.ஏ ராமகிருஷ்ணன் தலைமையில் விளையாட்டு மைதானத்திற்கான பூமி பூஜை விழாவினை நடத்தினார்.

இந்த மைதானத்தில் விளையாட்டு வீரர்களின் வசதிக்காக ஒடுகளம் மைதானம், கால்பந்து மைதானம், கபடி மைதானம், வாலிபால் மைதானம் , டென்னிஸ் மைதானம் மற்றும் கூடைப்பந்து மைதானம் உள்பட 12 பிரிவுகளில் மைதானங்களும் அதற்கான கட்டிடங்களும் அமைக்கும் பணி நடைபெறுகின்றது.



■ திண்டுக்கல் மாவட்டம் பேருந்து நிலையத்திற்கு செல்லும் பேருந்துகள் அனைத்தும் ஸ்கீம் ரோடு வழியாக டிஇ எல் சி செல்லும் சாலையில் சென்று பேருந்து நிலையத்தை அடையும், இதில் கடந்த ஆறு மாதத்திற்கு முன்பு புதிதாக போட்ட தார் சாலையில் திடீர் பள்ளம் ஏற்பட்டு ஏற்பட்டுள்ளது எனவே உயிரை காவு வாங்கும் முன் சாலையினை சீர் செய்ய மாநகராட்சி நிர்வாகம் நடவடிக்கை எடுக்குமா?

## திருப்பூரில் டாஸ்மாக் ஊழியர்கள் காலி பாட்டில்களை திரும்பப் பெரும் திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து கடை ஊழியர்கள் போராட்டம்



திருப்பூர், டிச.06-

திருப்பூர் மாவட்டத்தில் மொத்தம் 227 டாஸ்மார்க் மதுபான கடைகள் உள்ளது, இந்த கடைகளில் காலி பாட்டிலை திரும்ப பெற்று 10 ரூபாய் பெரும் திட்டம் கடந்த நவம்பர் 27 முதல் திருப்பூரில் அமலுக்கு வந்தது. இந்த திட்டம் அமலானது முதலே பார் உரிமையாளர்கள் எதிர்ப்பு தெரிவித்து வந்த நிலையில், திருப்பூர் மாவட்டத்தில் உள்ள நூற்றுக்கும் மேற்பட்ட டாஸ்மாக் ஊழியர்கள் திருப்பூர் அங்கேரி பாளையம் சாலையில் உள்ள டாஸ்மார்க் கிடங்கு அலுவலகத்தை முற்று கையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதைத்தொடர்ந்து காலி பாட்டிலை திரும்ப பெரும் திட்டத்தால் மது பிரியர்கள் வீசி செல்லும் பாட்டல்களை எடுக்க வேண்டிய நிலைக்கு ஆளாவதாகவும்., காலி பாட்டிலை திரும்பப் பெறும்பொழுது போதிய சுகாதாரம் இன்றி பாட்டில்கள் திரும்பப் பெறப்படுவதால் டாஸ்மாக் ஊழியர்களுக்கு சுகாதாரக் கேடு மற்றும் நோய் பரவும் இல்லை ஏற்படுவதாக கூறி காலி பாட்டில்களை ஒருபுறம் வைத்துக் கொண்டு மற்றொருபுறம் பணி செய்ய முடியாத நிலை ஏற்படுவதாகவும் கூறி பாட்டில்களை திரும்ப பெரும் திட்டத்தை ரத்து செய்ய கோரி திருப்பூர் மாவட்டத்தில் உள்ள டாஸ்மாக் ஊழியர்கள் நூற்றுக்கும் மேற்பட்டோர் முற்றுகையிட்டு டாஸ்மாக் கிடங்கில் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதைத் தொடர்ந்து டாஸ்மாக் மேலாளர் இரண்டு நாள் அவகாசம் கேட்டதை தொடர்ந்து போராட்டத்தை கைவிட்டனர். மேலும் இரண்டு நாட்களில் தீர்வு வராவிட்டால் மாபெரும் போராட்டத்தில் ஈடுபட போவதாக டாஸ்மாக் ஊழியர்கள் தெரிவித்தனர்.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000